## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

## அசல் வழக்கு எண். 48/2024

வாதி தரப்பு சாட்சி – 1 அப்துல் சலாம் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 09.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது

**1,2, 4 முதல் 7 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்து மைலம்பட்டி கிராமத்தில் நடுத்தெருவில் அமைந்துள்ளதா என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் நானும் எனது சகோதர சகோதரிகள் சேர்ந்து பாகப்பிரிவினை சம்மந்தமாக சமாதனம் பேசினோமா என்றால் இல்லை. ஒரு முறை கூட பாகப்பிரிவினை சம்மந்தமாக சமாதனம் பேசவில்லையா என்றால் பேசவில்லை. எனது தம்பி சாகுல் ஹமீது தாவா சொத்தை வைத்துக்கொண்டதாகவும் எனது சகோதரிகள் விகிதசார படி அவர்களது பங்கிற்கு ஈடான தொகையை பெற்றுக்கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2021 ம் வருடம் நான் , எனது தம்பி, எனது சகோதரிகள் சேர்ந்து தாவா சொத்தை பொறுத்து எனது தம்பி சாகுல் ஹமீதிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு தாவா சொத்தில் உள்ள உரிமையை விடுதலை செய்து கொடுத்துவிட்டோம் என்றால் அவ்வாறு எதுவும் செய்யவில்லை.

2. சாகுல் ஹமீது என்பவரிடமிருந்து பேசியப்படி கடந்த 24.01.2021 ம் தேதி பணத்தை பெற்றுக்கொண்டு தாவா சொத்தை விடுதலை செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் ஆங்கிலத்தில் செய்வேன். என்னிடம் காட்டப்படும் எனது தரப்பு வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் உள்ள கையெபத்து என்னுடையதா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 24.01.2021 ம் தேதியிட்ட பணப்பற்று இரசீது ஆவணத்தில் ஆப்துல் சலாம் என்று 1 மற்றும் 2 ம் பக்கத்தில் கையெழுத்து உள்ளதா என்றால் உள்ளது. அதை நான் செய்யவில்லை. எனது கையெழுத்தை போன்று வேறு யாரோ கையெழுத்து செய்துள்ளார்கள். 1,3,4,5 பிரதிவாதிகள் கையெழுத்து தெரியுமா என்றால் தெரியாது.

3. சாகுல் ஹமீது மகன் முகமது அனிபா இங்குள்ளார் என்றால் சரிதான். அவரிடம் மேற்படி தாவா சொத்தை சாகுல் ஹமீதுக்கு விடுதலை செய்து கொடுத்தப்பட்ட பின்னிட்டு அவரிடமிருந்து வாங்கிய பணம் போதவில்லை என்று கூறி மீண்டும் பணம் தரும் படி அலைபேசியில் கேட்டேனா என்றால் இல்லை. பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக ஒரு முறையாவது என்னிடம் முகமது அனிபா பேசியுள்ளாரா என்றால் இல்லை. நான் பேசிய அலைபேசியின் உரையாடல் பதிவுகளை தாக்கல் செய்தால் உண்மை விவரங்கள் தெரிந்துவிடும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்தவரை நானும், எனது சகோதர சகோதரரிகளும் சேர்ந்து 2 ம் பிரதிவாதிக்கு

கிரையம் செய்ய முடிவு செய்து விட்டோம் என்றால் சரியல்ல. நான் தான் தாவா சொத்தை 2ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்க சம்மத்தித்த பேரில் வருவாய் துறையில் பட்டா பெயர் மாற்றம் செய்ய ஒப்புதல் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

4. பட்டா மாறுதலுக்கு பிறகு 2ம் பிரதிவாதியின் மகன்கள் என்னை கேட்டு என்னிடம் ஆலோசனை செய்த பிறகு தான் வா.சா.ஆ 4 கிரைய ஆவணம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 24.01.2021ம் தேதியிட்ட இரசீது முறைப்படி தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு நாங்கள் அனைவரும் தாவா சொத்தை முறைப்படி ஒப்படைத்த பிறகு தான் 2ம் பிரதிவாதி அவரது மகன்களுக்கு கிரையம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதியிடம் மேலும் எனக்கு பணம் வேண்டும் என்று வற்புறுத்தி கேட்டேன் என்றும், அவர் தராத காரணத்தினால் அவருக்கு எதிராக உண்மையை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடன் பிறந்த மற்ற சகோதரிகளுக்கு மேற்படி உண்மை தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் முறைப்படி ஆவணம் ஏற்படுத்தியுள்ளதை தடுக்க எவ்வகையிலும் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

5. நான் உண்மையை மறைத்து கோரியுள்ள பாகம் எனக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எழுதி கொடுத்த ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முறைப்படி என்னிடம் வாங்கப்பட்ட சொத்தை தான் 6 மற்றும் 7 ம் பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**